உ

தாய்மொழி தழைக! தாயகம் வாழ்க !!

தமிழணங்கு.

ஒரு மதிமுகத் தாள்.

"அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே."

மலர் க.] விக்ரம ஆடி [இதழ் ச.

வாழ்த்து.

கமழ்மணங் கிளரும்வாகைக் காவலன் செங்கோல் வெல்க!
இமிழ்முர சேழிலி பெய்க! யாவரும் யாவும் உய்க!
அமிழ்துறழ் மகளிர் கற்பா ரணிதமி ழணங்கு வாழ்க!
தமிழ்வலந் திகழ்ந்தூ ழூழி தமிழரண் தழைக! நன்றே!

தமிழணங்கு வணக்கம்.

வடித்த சுவைச்செந் தமிழமிழ்த
வாரி மடுத்த மனத்தடத்தார்
மலர்வாய் விளங்கு மணிநாவின்
வலனுர் நிறைசொல் லொலிவடிவாய்
நடித்த நடனத் தொடித்தோகாய்!
நவில்வா னடையிற் பெடையனமே!
நறைத்தே னிரைத்த மொழித்திறலோர்
நயந்தீட் டியசொல் லோவியமே!
மடித்தீங் கிழைத்த வினைக்கொடியேன்
மடத்தை அடிவே ரறப்பறித்தே
மறித்து முறித்த மடப்பிடியே!
மலைவா ருலகக் கலகமெனத்
தடித்த விடத்தி னயர்வேற்குன்
தாள்நீள் நிழலே புகல்கண்டாய்!
தணியா மணங்கொள் தமிழரணம்
தணவா திணங்குந் தமிழணங்கே!

ஆ. மா. சிவஞானம்.

92

தமிழணங்கு வணக்கத்தின் அருஞ்சொல் விளக்கம்.

தமிழ் அமிழ்தவாரிமடுத்த — தமிழ் அமிழ்தமாகிய வாரியைக் குடித்த. வாரி—கடல்.

தமிழ் அமிழ்தம் வாரிமடுத்த — தமிழாகிய அமிழ்தத்தை வாரிக்குடித்த.

மனத்தடத்தார்—மனமாகிய தடாகத்தை உடையவர்கள்.

மனம்தடத்து ஆர்—மனம் என்னும் தடாகத்தில் பொருந்திய.

வாரிமடுத்த தடம் என்றது இல்பொருள்.

மலர்வாய்—மலர்போன்ற வாய் அல்லது மலரில்.

வலஞர் நிறைசொல்—வலன் ஆர் நிறைசொல்—வெற்றிபொருந்திய நிறைவேறும் மொழி.

வலன் நார் நிறை சொல்—வெற்றியும் அன்பும் நிறைந்த சொல்.

நவில்வா னடையிற் பெடையனமே — நவில் வான் நடையிற் பெடையனமே — சொல்லுதற்குரிய உயர்ந்த நடையில் பெண் அன்னமே.

நவில் நடையில் வால் பெடையனமே—சொல்லுதற்குரிய நடையில் வெண்மையாகிய பெண் அன்னமே.

நறைத்தேனிரைத்த மொழித்திறலோர்—நறை தேன் நிரைத்த மொழி திறலோர் — வாசனைபொருந்திய தேன்போன்ற ஒழுங்கினவாகிய மொழிகளின் திறமையுடையோர்.

நறைத்தேன் இரைத்தமொழி — வாசனைபொருந்திய தேன் துளிபோலும் இரைக்கப்பெற்ற மொழி.

நயந்தீட்டிய—நயம் தீட்டிய—நயமாக எழுதப்பெற்ற.

நயந்து ஈட்டிய—விரும்பியளிக்கப்பெற்ற.

தடித்த விடத்தின்—தடிப்பேறிய விஷத்திஞல்.

தடித்த இடத்தின்—தடித்ததாகிய இடத்தில்.

தாள்—திருவடி அல்லது இம் மதிமுகத்தாள்.

93

சோம்பலும் ஊக்கமும்.

திரு. வித்வான் முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்

தலைமைத் தமிழாசிரியர், போர்டு ஹைஸ்கூல், ஆரணி.

மக்கள் உள்ளமானது யாதானும் ஒன்றனில் எழுச்சி கொள்வது இயல்பாயுளது. அவ்வெழுச்சி வினைசெய்வதற்கண் ஆதலும், வறிதே போழ்து போக்கற்கண் சேர்தலும் என்றிருவகைத்து. முன்னதிற் சில்லோர்க்கு விழைவு பல்கும். பின்னதிற் பல்லோர்க்கு நுழைவு மல்கும். மல்கின், அவர்க்கு உள்ளம், உரை, உடல் என்னும் மூன்றும் தத்தந் தொழிலைச் செய்யாது, இயக்கமில்லாப் பொறிகளாய் முயற்சியின்றி நிற்கும். எண்ணம், சொல், செயல் எவற்றிலும் முயற்சியின்றியிருத்தலே சோம்பல் எனப்படும்.

சோம்பலுக்குத் தன் அடிமைகளாகப் பலரை யாக்கிக்கொள்ளும் வன்மையுண்டென்பர். அச்சோம்பல், மக்களின் ஆக்கத்திற்கு வேர்ப்புழுவாயும், அழிவுக்கு நச்சுநீராயும் இருத்தலால், அதுபோலத் தீயது வேறொன்றில்லை யென்பது திண்ணம். நெருப்பைப்போலச் சுடுவது பிறிதொன்றின்மையால், நெருப்பை நெருப்பாகவே கொள்ளுமாறு போலச்சோம்பலைப் போலத் தீயது மற்றியாதுமின்மையாற் சோம்பலைச் சோம்பலாகவே யுள்ளுவர் சான்றோர். சோம்பலானது தாமதகுணம் என்னுந் தாய்க்குப் பிறந்த மறத்தல், துயிறல், போது நீட்டித்தல் ஆகிய பொல்லாப்பிள்ளைகள் எல்லோர்க்கும் மூத்த பிள்ளையாகும். அப்பிள்ளையோடு சேர்ந்து விளையாடத்தொடங்கினார் எத்தகையராயினும் அவரோடு மற்றைப்பிள்ளைகள் மூன்றும் வலியவந்து மெலியக் கூத்தாடும். தொடக்கத்தில் அவ்வாட்டு நனியின்பந் தோற்றுவதாயினும், இறுதியில் வீயாததுன்பம் விளைத்தே தீரும். அதனால், அவை வாழ்நாளின் எல்லைகாண நேர்ந்தார்க்கு நன்மை பயப்பதுபோலக் காட்டி, அவர் விரும்பி யேறிய பின்னர், அவர்தம்மை யுவரியிலாழ்த்தி வீழ்த்துங்கலத்தை நிகர்க்கும் என்று உணர்த்தும்,

> 'நெடுநீர் மறவி மடிதுயில்நான்கும்
> கெடுநீரார் காமக் கலன்'

என்ற வள்ளுவர் வாய்மொழியை யொருவரும் மறத்தல் கூடாது.

சோம்பல், தன்னையுடையான் சிறந்த குடியிற் பிறந்து வளர்ந்து சீரும் பேரும் பெற்று, யாரும் புகழ வாழ்கின்றவனெனினும், அவனது குடிச்சிறப்பை மாய்த்தும், புகழை மறைத்தும், பெயரைப் பிறர் நினைவுக்கும் வாராதவாறழித்தும் விடும். அஃது ஒரு குடை நீழலிருந்து பொதுமையின்றி யுலகெலாம் ஆளும் அலகிலாப் பெருமையுடையானையும் தன்னை மேற்கொண்டானேல், கடிஞையைக் கையிலேந்திப் பிடிசோற்றுக்குப் படிமேலலையு மாண்டியாக்கி யொழியும். அது தன்னை நீங்காதவனை நண்பர் பலரும் இகழத்தக்கவாறு பண்ணுதலோடு, பகைஞர்க்கு அடிமையாகவும் புகுத்திவிடும். சோம்பல் நல்லெண்ணத்தைத் தோற்றலுஞ் செய்யாது. தோற்றினும் சொல்லவொட்டாது. இவ்விரண்டு மில்லையேற் செயல் எங்ஙன் உளது?

இவ்வுலக வாழ்க்கையில் அச்சோம்பலானது மக்களுக்கு யாதொரு நலனும் உண்டாகாதவாறு தடுத்து நிற்பதாகும். முதற் காரணமாகிய ஊக்கத்திற்கு மறுதலையாகி, அதனை மக்கள் உறுவண்ணந்தடை செய்கின்றமையாற் பொருளைப் பெறவழி யொன்று மில்லை. அப்பொருள்கொண்டு நிகழ்த்துங் கொடையில்லை. பின்னர் அக்கொடைபற்றிக் கொள்ளும் பெற்றியாய 'யாம் வள்ளன்மையுடையேம்' என்று தம்மைத் தாம் மதித்து மகிழுஞ் செருக்குமில்லை. அச்செருக்காலாகும் இன்பமும் இல்லை.

அத்தகைய சோம்பல் இக்காலத்தில் எல்லாவிடங்களிலும் பெருகித் தோன்றுவதைக் கண்டும், அதைப்பற்றிய அறிஞர்தம் அறிவுரைகளைக் கேட்டும், அதனை நீக்கவேண்டிப் பல படவரைந்தவற்றைப் படித்தும் அதன் துன்பத்திற்காளாகாதவர் சிலரே யாவர். வீடுகள், தெருக்கள், கடைகள், தொழிலகங்கள், கல்விக்கழகங்கள், நீதி மன்றங்கள், கோயில்களாகிய எவ்விடத்தும் அச்சோம்பல் விளையாடல் புரிகின்றது. கல்லையும், மண்ணையுமே அதுபற்றிற்றில்லை. மற்றிருதிணையுள்ளும் ஆண், பெண், அறிவு, செயல் எல்லாவற்றையும் அது பற்றிக் கொண்டிருக்கின்றதெனல் மிகையாகாது. தன்னாற் பற்றப்பெற்றவற்குத் தன் வடிவத்தைத் தோன்றச் செய்யாது நிற்குஞ் சிறப்பொன்றனைத்தான் அச்சோம்பலுடைத்தாயுளது.

சோம்பலுடையான் ஊக்கமில்லாத யானையைப்போல் உடல் வலிமையும், படைச்சிறப்பும் வாய்ந்தவனாயினும், தன்மீது பகை

யுள்ளவனும் அவ்விரண்டுமில்லாப் புலியைப்போன்று ஊக்கமொன் றே யுடையவனுமான பிறனொருவனாற் கொல்லப் பெற்றொழிவான். உலகில், அச்சோம்பேறி மரத்திற்கும் இழிந்தவனாகின்றான். அவனுக்கும் மரத்திற்கும் நல்லறிவின்மை, வினைமுயற்சியின்மை முதலியவற்றா லொப்புமையுண்டு. மக்கள் வடிவு தான் வேறுபாட்டை யுணர்த்துகின்றது. அதனால், அவனை மரத்திற்கும் இழிந்தவனாகக் கோடல் கூடாது எனலாம். அது சிறிது ஆராய்வார்க்குத் தவறெனத் தோன்றாதிராது. மரம் பயன்படுதல் போலச் சோம்பேறி எட்டுணையும் பயன் படவில்லை. படவே யியலாது. மரமோ பழம் முதலியன கொடுக்கின்றது. கோவில், வீடு, தேர், நாவாய்கட்கு உறுப்பாகின்றது. அதனால், அத்தன்மை யொன்றுமில்லாச் சோம்பேறியை மரத்திற்கும் இழிந்தவனாகக் கூறுவதே பொருந்துவதாகும்.

எஞ்ஞான்றும் வறிய வாழ்வாகிய கடலினின்றுங் கரையேற வொட்டாது திகைப்பிப்பது சோம்பலுக்குரிய தொழிலாகும். இனி இதன் மறுதலையாய ஊக்கத்தை யறிவாம்.

ஊக்கமென்பது உள்ளத்தின் கிளர்ச்சியாகும். உள்ளமானது சோம்புதலின்றித் தொழில் புரிதற்கண் எழுச்சிகொள்ளும். கொண்டு அதில் ஈடுபட நினையுங்கால் அத்தொழில் நன்றா? தீதா? என ஆராய்ந்து பின்னர் அவற்றில் தீங்குதவிர்ந்து நன்குபுரிய விரும்பிச் செய்யக் கிளர்ச்சிகொள்ளலே ஊக்கமென்றனர் சான்றோர். ஊக்கம் என்னும் மொழி நன்மை, தீமை இரண்டிற்கும் பொதுவே. எனினும், இருவகை வழக்கினுள்ளும் அது நலங்குறித்தே யல்லாது பொலங் குறித்துக் கொள்ளப்பட்டிலது. அத்தகைய சொற்கள் பலவுள. ஆக்கம், மணம், நெறி என்பனபோல்வன வெல்லாம் அடையின்றியும் நன்மைக்காதல் அறிக.

அவ்வூக்கமாகிய தண்ணீரே சோம்பலாகிய நெருப்பை அவிக்க வல்லதாகும். இயற்கை நெருப்பை அவிக்கத் தண்ணீர்க்கு வேண்டுங் காலத்தினும் மிகச் சிறிதே சோம்பற்றீயை யவிக்கத்தக்க வூக்கப் புனலுக்குக் காலம் வேண்டும். அதுதான் மக்களின் வளர்ச்சி என்னும் குழவிக்குத் தாய்ப்பாலாகவும் அவற்றிற்கு வருந்தளர்ச்சி என்னும் பிணிக்கு மருந்தாகவும் உளது. ஊக்கம் ஒன்றனாலேயே உயர்ச்சி யடைதல் கூடும். பொருள் தேடுவதும், அது தேடி அறம்புரிவதும், புரிந்து இன்பம் உறுவதும், அவ்வூக்கத்தினாற்றான் அமையும். ஊக்கம் செல்வத்தினுஞ் சிறந்தது. செல்வமோ அழிதற்பாலது.

எத்துணைக்காவலிட்டு ஓம்பி வரப்படினும் நீங்கி யொழிவது. ஊக்கம் அன்னதகைத் தன்று. அது செல்வத்தைப்போ லுடம்பிற்குப் புறம் பான தன்மையா லெஞ்ஞான்றும் பொன்றுவண்ணம் எளிதிற் காக்கப்படுதற் குரியது.

ஊக்கத்தாலேயே கல்வியிற் சிறந்தனர் சிலர். கேள்வியிற் பெரிய ராயினர் சிலர். இயற்கைப் பொருளாராய்ச்சியில் வல்லுநராயினர் சிலர். ஒழுக்க முதலியவற்றிலே மிகுந்தனர் சிலர். ஊக்கத்தாலே தோட்டிகளுந் துரைகளாகிக் கேட்டினையெல்லாம் அடியோடு ஓட்டி மேட்டிமையுற்று வாழ்கின்றனர். ஊக்கமே நல்ல நோக்கத்தையாக் கும். ஐம்பொறிகளைச் செந்நெறியிற் போக்கும். இறை வழிபாடு செய்தற்குரியதாக நெஞ்சினைத் தூயதாக்கும். இரு வினைகளையுந் தீர்க்கும். அருள் வாழ்விற் சேர்க்கும். ஊக்கத்தாலாகாதது ஒன்றுமே யின்று. உயரிய வாழ்வு ஊக்கத்தினாற்றான் உண்டு. வறுமையால் வாடும் நிலைமை சோம்பலாலும், செல்வத்தாற் சிறக்குந் தலைமை யூக்கத்தாலும் உண்டாதலை உணர்வோன் எவனும் முன்னதன் தீமையைத் தவிர்க்கவும், பின்னதன் நன்மையை யடையவும் முயலா மலிரானென்க.

ஊக்கமும் பொருளும் ஒருங்குடையவன், ஊக்க மொழிவதற் கன்றிப் பொருளொழிவதற்குச் சிறிதும் வருந்தவேமாட்டான். அத்தகையோனுக்கு ஊக்கம் ஒழிவது அரிது. ஆதலின் அவனை வருத்தம் வருத்த வழியில்லை. அவன் சென்ற பொருளைப் பொரு ளாக் கருதாது, நின்றவூக்கத்தை நிலையாய்ப்பற்றித் தனக்கு வேண்டு மனைத்தையும் நொடியிற் பெற்று மகிழ்வான். ஆதலின், அவனை அவ்வூக்கம் என்றுங் காக்கும். அவன் தோன்றிய குடியை மேன்மேல் உயர்த்தும். அவன்பாலுள்ள குற்றத்தைப் போக்கும். யாவரும் அவனைப் புகழவைக்கும். பகைவரெல்லாரும் பணிந்துநின்று அவன தேவல் கேட்கப்பண்ணும். குறளன் நெடியோனாகி அளந்த உலகப் பரப்பெல்லாம் ஒருங்கே எய்துவிக்கும். இடுக்கண் முதலியவற்றால் தளராதவூக்கமுடையவனிடத்தில் ஆக்கம் தானே வழிகேட்டு வரு தல் இயல்பாயிருத்தல் அறிக. சேரமான் பாலைபாடிய பெருங்கடுங் கோன் என்னும் பெயரிய புலவர் வேந்தர், மரங்களிற் பூப்பெருகு தலுக்கு உள்ளம் மடிந்திருத்தலில்லாத வூக்கமுடையோனது செல் வம் பெருகுதலை யுவமையாக்கூறியுள்ளது ஈண்டுக்குறிப்பிடத்தக்கது.

ஊக்கமுடையோன் கணைபலவற்றாற் புண்பட்ட ஞான்றும், அதனாற் சிறிதுந் தளர்வுறாது தன்பெருமையை நிலைநிறுத்தும் போர்க்களிறுபோலத், தான் எண்ணிய உயர்ச்சிக்குக் கேடுநேர்ந்தபோதும் அதனாற் றினைத்துணையும் வாட்டங்கொள்ளாது தன் பெருமையை நிலைநிறுத்துவான். அவன் ஒருபோதும் தான் தலைக்கொண்ட செயலைக் கடைப்பிடியில்லாத மடியர்பால் வையான். அவன் தாளாண்மையின்கண் வேளாண்மைஎன்னுஞ் செருக்குள்ளதென்பர் பெருநாவலர்.

அத்தகையோன் ஊக்கத்தை மேலும் மேலும் அடையத்தக்க வழியொன்றுண்டு. அஃது, அவனுக்கு வரும் இடையூறுகள் பல கோடி எனினும், அவற்றை அணுத்துணையும் பொருட்படுத்தாதவாறகற்ற வல்லது. பொறைமிக்க பாண்டிலை யிழுக்கும் பகடு சேற்றுநிலம் முதலியவற்றில் மருங்கொற்றி, மூக்கூன்றித், தான்தவழ்ந்து அரிதின்உய்க்கும். அதுபோல், ஊக்கமுடையோனும் தான்தொடங்கிய வினைசெய்தற்கண் இடையே நேரும் இடுக்கண்களைப் பொருட்படுத்தாமல் வினை முடிவு ஒன்றனையே யுளத்திலெண்ணிக், குறையை நிறைவுறச்செய்ய முயல்வான். அவன் வினைமுற்றியபின் உண்டாகும் இன்பத்தை இடையே துன்பம்வரும் போழ்தெல்லாங் கொண்டு, எடுத்த செயலிலேயே கருத்தைச் செலுத்தி வருவான். இடையே வருந் துன்பத்தை முடிவில் ஆகும் இன்பமாக மாற்றிக் கொள்ளுதலே ஊக்கத்தை மேலும் மேலும் வளர்க்குந் தகைத்தெனினும் அதனை அடைதல் எளிதன்று 'இடுக்கண் வந்துற்றபோது எரிகின்ற விளக்குப்போல நடுக்கமொன்றானுமின்றி நகு'தல் என்னும் பெறலரும் பான்மையுடையோர் சிலரேயாவர். அவரே இன்பத்துள் இன்பம் விழையாது துன்பத்துள் துன்பம் உறுதலிலராய், முனிவரெனத் தக்கவர்.

ஊக்கமும் சோம்பலும் முறையே அடியோடு கொள்ளவும் அடியோடு தள்ளவும் படா என்பது சிலர் கொள்கை. அவர் கூற்றும் அறியதக்கதே. அஃதாவது, கொலை, களவு, பொய், கள் முதலாயினவற்றை மேற்கொள்ளுமாறு உள்ளந் தூண்டினால் அங்குச் சோம்பலடைதலும், ஊக்கந் தவிர்தலும் வேண்டுமென்பதே. அவர் சொல்வன்மைக்கு மகிழ்ந்து அதனைக் கோடல் தவறாகாது. அவற்றில் ஊக்கம்கொண்டால் என்னாகும்? முதலிற் கூறியவாறு நன்மையிற்

செலுத்தப்படும் உள்ளக் கிளர்ச்சியன்றோ ஊக்கமெனப்படும். ஆதலின், தீயனபுரியாமை, நல்லன செய்தல் என்னுமிரண்டனுள்ளும் ஒரு சிறிதுஞ் சோம்பலைக் காண்டலின்றி இம்மை மறுமைப் பயன்களை யெஞ்சாது பயக்கும் ஊக்கத்தைக் கடைப்பிடித்து 'உலகறியப் பான்முளைதின்று' மறலியுயிர் குடித்த கான்முளை போன்று நினைத்தவற்றை நிறைவேற்றி அனைத்து நலனும் பெறுதலே அறிவுடைய மக்கள் கடனாம்.

திருவள்ளுவர்.

திரு. சா. நடராசன், வேலூர்.

(66-ம் பக்கத் தொடர்ச்சி.)

"அடிசிற்கினியாளே அன்புடையாளே" என்ற தொடக்கத்துச் செய்யுளிற் குறிக்கப்பட்ட தொன்றைத் தவிர்த்து ஆசிரியர் தம் இல்லற வாழ்க்கையைக்குறித்துப் பிற அகச்சான்று லொன்றும்கிடைக்கவில்லை. அத்தனிச் செய்யுளே பற்றுக்கோடாகப் பழஞ்சோற்றிற்கு விசிறிகொண்டு வீசச்சொன்னதும், பகலில் விளக்கேற்றச் சொன்னதும், நீர் முகந்துகொண்டிருக்கையில் விளித்துக் கைக் கயிற்றை விட்டுவரச்சொன்னதுமாகிய பல கதைகள் உலவுகின்றன அஃதெங்ஙனமாயினும், நாணமிகுந்த மனைவியர் தம் கணவர்பால் அன்பு செலுத்தி ஈடுபட்டிருப்பதை அன்னார் விரும்பியாங்கு உணவு திருத்திச் சமைத்துப் படைத்தலினாலேயே வெளிக்காட்டுவர் என்பது போதர, ஆசிரியர் "அடிசிற்கினியாளே" என்று முதற்கண் அட்டிற்றிறத்தை வியந்து, "அன்புடையாளே" என்று அடுத்து அரற்றி உண்மை தெரித்தநயம் பெரிதும் போற்றற்குரியதாம். இவ்வுண்மையையே,

> "...தான்துழந்தட்ட தீம்புளிப்பாகர்
> இனிதெனக் கணவன் உண்டலின்
> நுண்ணிதின் மலர்ந்தன்றே
> ஒண்ணுதல் முகனே"

என்னும் பழந்தமிழ்ப் பாட்டும் வலியுறுத்தாநிற்கும்.

மேலும் திருக்குறளின் இறுதிப் பகுதியாகிய 'இன்பத்துப்பால்' அமைந்துள்ள அழகையும், அதன்கண் பொதிந்துள்ள உண்மைகளையும் நன்காராய்வோர்க்கு, ஆசிரியரின் இல்லற வாழ்க்கை மிகச்சிறந்த

பொலிந்திருக்க வேண்டுமென்பது தெள்ளிதிற்புலனும், இவ் 'இன்பத்துப்பால்' செந்தமிழ் மொழிக்குச் சிறப்பாய் உரிய அகப் பொருள் நாடக வழக்குப்பற்றிச் செய்யப்பட்டதொன்றாகலான், அது, தொல்காப்பியப் பொருளிலக்கணம், நக்கீரனார் அருளிச் செய்த 'இறையனாரகப்பொருள்' உரை மாணிக்கவாசகர் அருளிய 'திருக்கோவையார்' முதலான நூல்களைப் பயின்றார்க்கன்றி, ஏனை யோர்க்கு எளிதிற் பொருள் விளங்குவதன்று. பரிமேலழகர் அதற் கெழுதியிருக்கும் உரையும் சுருக்கமாகவே இருத்தலால் அவ்வுரை கொண்டும் அதன் பொருளை எல்லாரும் உணர்தற்கு ஏலாதென உயர்திரு மறைமலையடிகளார் கூறுவர். நிற்க, இது புறனடை

திருக்குறளும் தமிழணங்கும்.

கார்லைல் என்ற அங்கில ஆசிரியர் அங்கிலத்தின் தலைசிறந்த கவிஞரான ஷேக்ஸ்பியர் என்பவரைப்பற்றிக் கூறுங்கால், அங்கிலே யன் ஒருவனை, "உனக்கு இந்தியா வேண்டுமா, அன்றி ஷேக்ஸ்பியர் வேண்டுமா? என்று வினவினால், அவன், "இந்தியாவை இழப்பினும் இழப்பேன், ஷேக்ஸ்பியர் நம் உயிர் நாடிபோன்றவர், அவரை இழக்க ஒருப்படேன்" எனப் பதிலிறுப்பான் என்று கூறி, ஷேக்ஸ் பியரையும், அவரால் அங்கிலமொழி அடைந்த உயர்வையும் பசுமரத் தாணிபோன்று கேட்போர் உள்ளத்துப் பதியவைத்தார். ஆயின், அங்கிலம் ஷேக்ஸ்பியருக்கு எத்துணை கடப்பாடுடையதோ அதை விடப் பன்மடங்கு தமிழ், வள்ளுவருக்குக் கடப்பாடுடையதாம். என்னை? "எல்லாப் பொருளும் இதன்பாலுள; இதன்பால் இல்லாத எப்பொருளுமில்லையால் "என்று அக்காலத்திருந்த ஒரு பெரும் புலவர் கூறியாங்கு, மக்களாகிய நாம் அறிய வேண்டுவனவெல்லாம் இத்திருக்குறள் நூலின் கண்உள. தமிழணங்கு தலைபெடுத்து அவ ளுடைய புதல்வர்களாகிய நமக்கு இன்முகம் காட்டி நிற்பது தமிழ் நாடுசெய்த தவப்பயனாய் மனத்துக்கண் மாசிலராகிக் குணமென்னும் குன்றேறி நின்ற திருவள்ளுவர் அவதரித்ததனாலன்றோ! அவரா லன்றோ! நாமும் பண்டைக்காலத்தே மிகச்சிறப்புப்பெற்று வாழ்ந்த சமுதாயத்தைச் சார்ந்தவரென எண்ணிடப்பெற்று வருவதற் கேற்ற பெருமையைப் பெற்றோம். மேலும் அவர் தம் நூலில் யாவர்க்கும் ஒப்ப முடிந்த பொருட்சிறப்பும் இலக்கிய இலக்கண வனப்புமமைந்து கிடத்தலினால் வள்ளுவர் காலத்திலேயே

அது பிரமாண நூலாகத் தொடங்கிவிட்டது. மலைவு வருமிடங்க டோறும் 'இது வள்ளுவன் மொழி' யென்றால் அவ்வளவில் மலைவு நீங்கிவிடும். கண்ணுதல் கவியிலுங் குற்றங் கற்பித்த நக்கீரரே தமது இறையனாரகப் பொருளுரையிலே குறளைப் பிரமாணமாக எடுத் தாண்டு போயினரென்றால் மற்றோர் கொள்வது புதுமையாமோ! மணிமேகலை எழுதப்பட்ட காலத்திலேயே திருக்குறள் உலகில் பல ராலும் ஒப்பத் தக்கதோர் உறுதி நூலாய் விளங்கியதென்பதை மேலே விளக்கினும். இவ்வகையில் எல்லார்க்கும் பொதுநூலேயாகித் தமிழர்க்குச் சிறப்பு நூலாய திருக்குறளை நாளடைவில் தமிழர் புறக்கணிக்கலாயினர். ஐயகோ! இன்று உலகிலுள்ள மற்றெம்மொழிப் புலவர்களாலும் போற்றற்குரிய தெய்வப் புலமைவாய்ந்த செம்புலச் செல்வர் ஒருவர் நந்தமிழ் மொழியினுண்டு என்பதையும் அவர் அருளிய அருமருந்தாய நூல் திருக்குறள் என்பதையும் அறியாத தமிழ் மாக்கள் எத்துணை எத்துணைபேர்! ஏழை யொருவனுக்கு இறைவன் ஒரு பொற்புதையலையளிக்க, அப்புதையலை எடுத்துக் கொள்ளாது அவ்வேழைமகன் தாண்டிச்செல்வானாயின் அவ னது பேதைமையை என்னென்று கூறுவது! அருமணிப்புதைய லன்ன திருக்குறள் நூல் ஒன்று கிடைத்திருக்க அதனைத் தமிழர் கொள்ளாது ஒதுக்கின் அவர்கள் அறிவுடைமையை என்னென்பது! யாவர்க்கும் பொதுமறையாயும், ஒழுக்க நூலாயும் உலக வாழ்க் கைக்கு இன்றியமையாத செம்பொருளாயும் உள்ள திருக்குறளை ஒவ்வொரு தமிழ் மகனும் போற்றிப் படித்துச் செந்நெறிகண்டு இனிது வாழவேண்டும். என்று, தமிழன், தமிழ்ப்புலவோர் மாட்டு தன் அன்பைப் பெருக்கி அவர் தம் நூற்களைக் கற்றுணர ஆர்வம் அடைகின்றானோ, அன்றுதான் தமிழன் தமிழ் மொழிக்கும் தமிழ் மக்கட்கும் ஆக்கந்தேடுபவனாவான். அன்றே "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கக்கும் தன் மகனைச், சான்றோன் எனக் கேட்ட தாய்," எனப் பொய்யாமொழி முழங்குமாறு தமிழணங்கு நம்மிடையில் அகங்களிதுளும்ப, முகமலர்ச்சி எய்தத் திருநடம் புரிவாள்.

நமது கடமை.

எனில், பல்வகைகளிற் சிதறுண்டு கிடக்கும் தமிழ் மக்களை ஒருமுகப்படுத்தத் தமிழறிந்தார் செய்யவேண்டுவன யாவை? ஒவ் வொரு தமிழனுக்கும் திருக்குறள்மேல் ஆர்வம் உண்டாகுமாறு தமி ழறிந்தோர் செய்தல் வேண்டும். அந் நூலில் பொதிந்துள்ள பல்வேறு

உண்மைகளை மக்கள் அறியுமாறு ஆங்காங்கு மாலைப்பள்ளிக்கூடங்களமைத்து மொழிப்பயிற்சி கொடுத்தல்வேண்டும். ஒவ்வொரு தந்தையும் தாயும் தம் குழந்தைகட்குக் குறட்பாக்களைச் சொல்லிவைத்துக் கேட்டு மகிழ்தல்வேண்டும். ஒவ்வொருநாளும் சில புதிய குறட்பாக்களையாவது பொருளறிந்து படித்தபின்னரே உண்ணல் வேண்டும். தமிழன் திருக்குறளோடு உறவாடலும் வீடு வாசலில் திருக்குறளின் மணம் வீசுமாறு செய்தலும் தன் கடைமைகளாகக் கொண்டொழுகல் வேண்டும். ஆங்காங்குத் திருவருட் கழகங்கள் ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் நிறுவி வாரந்தோறும் திருக்குறளைப்பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்தல்வேண்டும் ஒவ்வொரு ஊரிலும் தமிழ் நூல் நிலையம் பொதுமக்களுக்குப் பயன்படுமாறு ஒன்றுவது ஏற்படுத்தல்வேண்டும். இந்தியாவிலுள்ள இந்திய மொழிகளில் எந்தெந்த மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப் படாதிருக்கின்றதோ அந்தந்த மொழிகளில் மொழிபெயர்க்கச் செய்தல்வேண்டும் கிறித்தவப் பாதிரிமார் விவிலிய நூலை நாடெங்கும் பரவச்செய்தவாறு, காண்போர் கண்ணும் மனமும் கவரப்படுமாறு திருக்குறளை மிக அழகாக அச்சிட்டு மக்கட்கு அடக்கவிலையினும் குறைந்த விலைக்கு வழங்கவேண்டும். திருக்குறளைப் பயந்த திருவள்ளுவரின் திருநாளை ஆண்டுதோறும் தமிழ்நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடச்செய்தல்வேண்டும். திருக்குறளை ஒவ்வொரு மாணவனும் 5-வது வகுப்பிலிருந்தாவது கட்டாயமாகக் கற்கச் சர்க்கார் உத்தரவு பிறப்பிக்கச் செய்தல்வேண்டும். சென்னைமாநிலத்திலுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் தமிழ்மொழியில் முதன்மையாகத் தேர்வுபெறும் மாணவர்களுக்குத் தக்க பரிசுகள் வழங்கி, அவர்கள் மேன்மேலும் தமிழாராய்ச்சியில் ஈடுபடுமாறு ஊக்கல்வேண்டும். எத்திறத்தார்க்கும் பொதுவாகப் பயன்படுமாறு சென்னை நகரத்தில் திருவள்ளுவர் பெயரால் ஒரு மாளிகை அமைத்து, அவர் உருவச்சிலையொன்றை யதன்கண் நிறுத்தி, இற்றைநாள்வரை எழுதப்பட்ட திருக்குறள் உரை, ஆராய்ச்சிக் கட்டுரை, மொழிபெயர்ப்பு, பதிப்பு முதலியவற்றை ஒருங்கே சேமித்துப், பலர்க்கும் பயன்பட வைத்தல்வேண்டும். யாவற்றுக்கும் மேலாகத் திருக்குறள் நூலில் உள்ள ஒழுக்கக் குறள்களைப் பொருக்கியெடுத்து ஒவ்வொன்றை ஒவ்வொருவர் ஓதி ஒழுக்க நெறிக்குக் கொண்டுவரல் வேண்டும்.

மேலே கூறியவற்றில் சிலவற்றைச் செய்துமுடிக்கப் பொருள் உதவிதேவை. தமிழ்நாட்டில் பொருள்படைத்தார்க்குப் பஞ்சமில்லை.

இவரில் சிலராவது தம் செல்வம் இத்துறைகளின் பயனு மாறுசெய்தல் இவர் தமிழ்நாட்டில் பிறந்ததற்குச் செய்யும் சீரிய கைம்மாறும். தமிழ்ச் செல்வர்கள் இதை உன்னி, "செல்வர்க்கே செல்வந்தகைத்து" எனும் பொருண்மொழிக்கு இலக்கணமாவார் களாக. ஊருணி நீர் நிறைந்ததுபோலவும், பயன்மரம் உள்ளூர்ப் பழுத்ததுபோலவும் இவர் செல்வம் இத்தூய தொண்டிற்குப் பயன் படுவதாகுக. ஒவ்வொரு தமிழனும் விடாமுயற்சிகொண்டு இத் துறையில் உழைப்பானாயின் ஊழையும் உப்பக்கம் காண்பதில் தினைத்துணையும் ஐயமில்லை. வினைத்திட்பமென்பது ஒருவர்க்கு மனத்திட்பமேயாகலான் யாரும் தாம் முற்படும் வினையில் சலியாத நம்பிக்கை கொள்ளல்வேண்டும். தான் செயப்புகும் இவ்வேலை விழுமிய நோக்கங்களையுடையதாதலாலும், முடிவில் யாவர்க்கும் இன்பமே பயத்தலாலும், தகைமாண்டதக்கார் துணைகொண்டு, எத்துன்ப மிடைவரினும் சகித்து, ஒவ்வொரு தமிழனும் இச்சிறந்த கடைமையை மேற்கொள்வானாகுக.

இதுவே எல்லா மக்களையும் ஒருமுகப்படுத்தச் சாலச்சிறந்த வழியாம். இன்றைய உலகம் பல்வகையில் பிரிந்து பிணங்கி இடருற்று வருவது கண்கூடு. "நாகரிக உலகம்" இன்று அழுக்காறு; அவா, வெகுளி, வன்கண்மை, உயிர்க்கொலை முதலிய பேய்க்குணங்களுக்கு இரையாகி வருதல் ஒருதலை. திருவள்ளுவரின் அறநெறியின் வழி உலகம் நிற்குமாயின் உலகோர் துன்பம் நீங்கி வேண்டிய வேண்டி யாங்கெய்தற்கு உறுதுணையாக விளங்கும் ஒற்றுமையாஞ் செல்வத் தை அடைந்து அமரவாழ் வெய்துவர். அந்நாளே உலகெலாம் இன்பவெள்ளம் ஊற்றெடுத்தோடக் காணும் நன்னாள். அந்நாளை அண்மையிலேயே நாம் காண இறைவன் இன்னருள் பாலிப்பானாகுக.

"சாதிமதச் சச்சரவேன்? மேல்—கிழக்குச்
சழக்குகளேன்? சகத்தீர் வம்மின்!
மேதினியுண் டானபொழு துண்டான
பொதுநெறியை விளங்கக் காணீர்!
தீதிரிய நலம்பரவத் தேவர்திரு
வாய்மொழியை யியல்பாய்ப் போற்றி
யோதியுணர்ந் தெல்லாரும் ஒற்றுமையாய்
வாழ்ந்திடுவோம்! உண்மை வெல்க!"

சுவாமி சுத்தானந்த பாரதியார்.

திருவள்ளுவர் வாழ்க. தமிழ் வாழ்க! தமிழணங்கு வாழ்க!

மலை நலம்.

வித்வான் திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை
அவர்கள், செங்கம்.

58-ம் பக்கத் தொடர்ச்சி.

நிலவுலகு குளிரவே, அதனைச்சுற்றிச் சூழ்ந்து நின்ற நீராவி குளிர்ந்து நீரைப் பொழிவதாயிற்று. அந்நீர் நிலத்தில் மழையாக விழுந்தது. அம்மழையும் பெருமழையாகவே இருந்திருக்கும். இப்பெருமழை, நீர் நிலவரையில் வீழ்ந்து பள்ளங்களை நோக்கி ஓடி அப்பள்ளங்களை நிரப்பத் தொடங்கிற்று. அதன் பயனாகவே பேரளக்கர்களும் சிறு கடல்களும் தோன்றுவனவாயின. அம்மழைப் பெருக்கால் நிலவரையில் பெருமேடுகள் கரையத் தொடங்கின. இவ்வாறு ஆண்டுகள் மிகப்பல செல்ல, இவைகள் உயர்ந்து, நுனிகுவிந்து அடி பரந்து இன்று நம்முன் தோன்றும் மலையுருவைப்பெற்றன. பின்னர் உயிர்கள் தோன்றலே, அது காரணமாக வளவிய காடுகள், மாவும் புள்ளும் பிறவும் மலிந்து இயற்கையழகின் இன்பவுறையுளாக இலகத் தொடங்கின என சர். ஜார்ஜ் தார்வீன் (Sir George Darvin) என்ற நில நூல்புலவர் எடுத்து அழகாக இயம்புகின்றனர்.

இனி, நிலவுலகின் அடியில் இருக்கும் நெருப்பின் வெப்ப மிகுதியால், ஆண்டு வெந்து குழம்பும் பொருள்களும் காற்றும் மேனோக்கி நிலவரையின் மேற்பகுதியை யுந்துவதுண்டு. அது மெலிந்த பகுதியாயின் அதனைத் தகர்ந்துகொண்டு அவை வெளிவருகின்றன. அங்ஙனம் வருமிடத்து, அப்பகுதி நிலத்தினும் உயர்ந்து,குவிந்து மலையும் குன்றுமாதலும் உண்டு. அம்மலையுச்சிகளில் புழைசெய்துகொண்டு அவ்வனற் குழம்பும், புகையும், பிறவாயுக்களும் வெளிவந்து வழிகின்றன. இத்தகைய எரிமலைகள் பல பிறநாடுகளில் உள்ளன. மேனிலத்தை யுந்தியவழி, உயர்தற்கு இடந்தந்து, எரிக்குழம்புகள் வெளிப்போதருதற்கு இடந்தாராதனவும், இடந்தந்தவை எரிப்பொருள்கள் யாவும் வெளியாய்விட்டமையின் ஆறி, புழை தூர்ந்து ஏனைமலைபோலாயினவுமாக மலைகள் இவ்வகையாலும் தோற்றம் பெற்றிருக்கின்றன.

இங்ஙனம் தோன்றிய மலைகள் நெருப்புத் திரளாயிருந்த நிலவுலகு காலநிலையில் குளிர்ந்து தன் இயற்கைச் சுழற்சி, நீர்க்காற்று, முதலிய வற்றால் பெருமேடும், பேரழுவமுமாக மாறுதல், உள்ளிருக்கும்

நெருப்பின் உருப்ப மிகுதியால், மென்னிலங்கள் உயர்ந்து எரிமலையும், எரிமலை யாக்கங்களுமாக மாறுதல் என இருவகையாய்த் தோன்றிய மலைகள்,-மழையால் நனிகுவிந்து, அடிபாந்து விளங்குவனவாயின என்பது கண்டோம். பின்னர்க் குளிர் மிகுதியால் மலையுச்சிகள் நீர் உறைந்து பனிக்கட்டிகளால் மூடப் பெறுவனவாயின. நம் நாட்டில், இமயந்தவிரப் பிற எம்மலையும் பனி முடிபெற்றிலது. மற்றும், மேனாடுகளில் மலையெனப் பேரியயாவும் பனிமுடியுடையனவாகும். பனிக்கட்டிகளும், பெரும்பாறையும், பெருங் குன்றம்போல உறைந்து மலைகளின் உருமாறுதற்குரிய செய்கை செய்துள்ளன. இமயவரையின் கொடுமுடிகள் பனிமுடி பெற்று, பொன்னும் வெள்ளியும்போலப் பொலிதலின், பொன்னிறமுடையவை "பொற்கோட்டிமயம்" என்றும் வெண்ணிறம் திகழ்பவை "வெள்ளிமால்வரை" யெனவும் சான்றோராற் பாடல் சான்றன. பனிப்பாறைகளின் இயக்கத்தால், மலைமுடிகள் தேய்ந்து, குழிந்து பலப்பல மடிப்புக்களும், நெடுமுடிகளும், சமநிலையும் பெற்றுள்ளன. நம் நாட்டுவரைகள் மாத்திரம், மழை, காற்று, நிலவுலகின் இயற்கைச் சுழற்சி என்ற இவற்றால், மேற்கூறிய மடிப்பும், குழிப்பும், குவிப்பும் பிறவும் பெற்றிருக்கின்றன என நிலநூற் புலவர் கூறுகின்றனர். கடற்கண் ஆங்காங்குச் சிதறித் தோன்றும் தீவுகளுட் பல, கடலகத்தின் அடிவரையில் நிலவக நெருப்பின் செய்கையாற் பிறங்கிய பெருவரைகள் என்றும், கடல் நீரால் விழுங்கப்படமாட்டாத உயர்ச்சியுடைய பெருவரைகளின் தலை நிலங்கள் என்றும் உரைக்கின்றனர்.

இம்மலைகள், காலந்தோறும் பெய்த பெருமழையால் குளிர்ந்து கரைந்து, பெருங்காற்றின் அருந்துணையால் மண்ணும் மணலும் நிரம்பி எருவும் உரமும் செறிந்து வளம்பெற்றன. அவற்றின்பால் மரமும் செடியும் கொடியும், புல்லும் பூடும் பெருகி "வெயில் நுழை பறியாக்குயில் நுழை பொதும்பர்கள்" உண்டாயின. மலைவரையிற் பெய்த மழைநீர், அடியில் ஊறிச் செல்லுங்கால் ஆங்காங்குள்ள கற்பாறைகளால் தடையுண்டு தெண்ணீர்ச் சுனைகளாய் அமைகின்றது; மலைச்செறிவுகளின் இடையில் பெய்யும் நீர் போக்கிடம் இல்வழி அங்கே நின்று விரிந்து நீர் நிலைகளாகின்றது. இமயவரையிலுள்ள மானச சரோவம் முதலிய ஏரிகள் பல இவ்வாறு தோன்றியனவாகும். ஆயினும் நிலத்திடையே பல சிறு கடல்கள் உள்ளன அவற்றின் தோற்றம் வேறுவகையாலாயது என்பர்.

தொடரும்.

குடை நிழல்.

திரு. K. P. சந்தோஷம் அவர்கள் B. A; L. T;
தலைமையாசிரியர்
ஊறீஸ் உயர்தரக் கலைக்கழகம், வேலூர்.

(61-ம் பக்கத் தொடர்ச்சி.)

காரும், குடையும் நிழல் தருவதிலும், நிறத்திலும் ஒத்திருப்பதை எடுத்துரைத்தோம். இனி, காராகிய மேகத்திற்கும், கார்வண்ணனாகிய திருமாலுக்குமுள்ள ஒற்றுமையைக் காட்டுவோம். பண்டைத் தமிழரின் அறிவையும் ஒழுக்கத்தையும் வியக்கும் வகையில் நமக்குப் பேணித் தருகின்ற தொல்காப்பிய நூலில், முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், என நிலம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பது கூறப்படுகின்றது. அன்றியும், இந்த நிலத்திற்கு இந்தக் காலம் பொருத்தமுடையதென்று அதிற் சொல்லியிருக்கிறது. தொல்காப்பிய முறைப்படி, முல்லை நிலக்காட்சி கார்காலத்தோடு கூறப்படுதல்வேண்டும். ஏன் இவ்வாறு முல்லை நிலத்தைக் கார்காலத்துடன் சேர்த்தல்வேண்டுமென்ற ஆராய்ச்சியை நிகழ்த்த இடமிதுவன்று. ஒன்றைமாத்திரங் குறிப்பிடலாம். முல்லை என்பது காடும், காட்டைச் சார்ந்த விடமுமாம். ஆங்கடர்ந்த காடு இருண்டு தோன்றும் முகில் திரள்கள் வானில் எழுந்து, வெயிலைத்தடுத்து வெளிச்சத்தை மறைக்கின்ற கார்காலத்தில் காடு தழைத்துப் பொலிவுபெறும். ஆதலின், முல்லை நிலத்திற்குங் கார்காலத்திற்கும் ஓர் இயைபு உண்டென்பது பெறப்படும். இந்த இயைபு, (கரு) மணிவண்ணனாகிய திருமால் முல்லை நிலக்கடவுள் என்று தொல்காப்பியம் இயம்புவதால் உறுதிப்படுகின்றது.

"மாயோன் மேய காடுறை யுலகமும்,"

என்பது தொல்காப்பியம். இதில், 'மாயோன்,' என்ற சொல்லிற்குக், 'கரியவன்,' என்று பொருள் கொளல்வேண்டும். சங்க நூல்களில் இச்சொல் இப்பொருளில் வழங்கப்படுகிறது. இதிகாச புராணங்களில் கிருஷ்ணாவதாரத்தில் மாத்திரம் திருமாலுக்கும் முல்லை நிலமக்களாகிய இடையருக்குந் தொடர்பு சொல்லப்படுகிறது. தொல்காப்பியமோ அத்தொடர்பு என்று முளதென்று எடுத்துரைக்கின்றது. முல்லை நிலப்பொருளாகிய பால்உயிரை வளர்ப்பது, காப்பது.

காக்குந் தொழிலுடைய திருமால் பாற்கடலிற் பள்ளிகொண் டான் என்பது மிங்கு இயைத்துக் கோடற்பாலது. 'கிருஷ்ண' என்ற வடமொழிச் சொல்லின் நேரான பொருள் 'கரியவன்' என்ப தை நாம் கருத்தில் வைத்தல்வேண்டும். 'கிருஷ்ணபக்ஷம்' என்ற சொற்றொடர் 'இருட்டுப்பகுதி' எனப் பொருள்படுதலை நோக்குக. இவற்றை எல்லாம் நோக்குங்கால், தொல்காப்பியங் கூறுகின்ற உண்மைகள் எத்திறத்தன வென்பது நமக்கு ஒருவாறு விளங்கும். குடையுங்,காருந், திருமாலுந், தொழிலிலும் நிறத்திலும் ஒத்திருப்ப தைக் காட்ட இவ்வளவு பகர்தல்வேண்டியதாயிற்று.

"திருவுடை மன்னரைக் கண்டால் திருமாலைக் கண்டேனே எனும்," என்ற ஆழ்வார் கூற்றுப் பலருமறிந்தது. திருவுடைய மன்னர்க்குந் திருமாலுக்குமுள்ள ஒரு பொதுத்தன்மை யாதெனின் காத்தல். காத்தலாகிய தொழில் முல்லை நிலத்தே நிகழ்வது. ஆனி ரை, ஆட்டு நிரை காத்தல் இடையரது பண்டைத் தொழில். இத் தொழில் செவ்வனே நிறைவேறுவதற்குக் கோல் வேண்டும் ஆடு மாடுகளைக் காக்கவும், அவற்றிற் கிடையூறு செய்கின்றவற்றைத் தாக்கவுங் கோல்வேண்டும். பிற்காலத்தில் மக்கள் ஒருவனது ஆட்சிக் குட்பட்டுத் தத்தம் கடமைகளைச் செய்யும் நிலைமை வந்தபொழுது ஆட்சி செய்கின்றவன் கையிலொரு கோல் கொடுப்பது வழக்கமாகி இருத்தல்வேண்டும். இடையன் மந்தையைக் காக்கின்ற முறையில் மன்பதையைக் காக்கின்றவன் மன்னனானான். இவனது கோல் செங் கோலாயிற்று. இவ்வகையில் முதலில் ஆட்சிமுறை தொடங்கியிருத் தல்வேண்டுமென்பது 'கோன்' என்ற தமிழ்ச் சொல்லாற் குறிக்கப் பெறுகின்றது. 'கோன்' என்பது இடையனையும் அரசனையும் ஒருங்கே குறிப்பது. தென்னாட்டில் இடையரைக் கோனார் என்றே இன்றுங் கூறுகின்றார்கள்.

மன்னர்க்கடையாளமாகின்றவற்றிற் செங்கோல் ஒன்று. பிறவு முள. அவை, தார், தேர், கொடி, முடி எனப்பல. பலவாயினுங் கவிகை அல்லது குடை என்பது எல்லாவற்றினுஞ் சிறந்ததாகக் கருதப்படுகின்றது. பெரும் புகழுடன், அளவிற் பரந்த நிலப்பகுதி யைத் தமதாக்கிச் செங்கோல் ஓச்சிய வேந்தரைச் சுட்டி 'ஒரு குடைக்கீழ் உலகாண்டவர்' என்று பொருள்படுஞ் சொற்களைத் தமிழ்ப் புலவர் தொன்றுதொட்டே வழங்கி வந்திருக்கின்றனர். மன்னனுடைய நாற்படையும் போர்க் கருவிகளும், கோட்டை

கொத்தளங்களும் பெரும்பாலும் அவனது வலிமையையும், பகைவரைத் தெறும் திறத்தையுமே காட்டும். குடையோ, அவன் தன் குடிகளைத் தீங்கின்றிப் பாதுகாத்து நடத்தும் இனிய தன்மைக்கடையாளமாகும். இது குறித்துக் குடையைச் சிறப்பித்துக் கூறுதலே ஒரு வேந்தனின் மேன்மையை எடுத்துரைக்கும் வழியாயிற்று: தேனினுமினிய சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகள்,

> "திங்களைப்போற்றுதுந் திங்களைப்போற்றுதுங்
> கொங்கலர் தார்ச்சென்னி குளிர்வெண்குடை போன்றிவ்
> வங்கணுலக களித்தலான்."

என்று தமது நூலைத் தொடங்குகின்றார். சிலப்பதிகாரத்திற்கு மங்கா நல்லுரை செய்த அடியார்க்கு நல்லார். இதுபற்றித் தம் முரையில், "இது, நடை மிகுத்தேத்திய குடைநிழன் மரபு" என்ற தொல்காப்பியப் பகுதியைச் சுட்டுகின்றார். ஆதலின், 'குடை நிழல்' என்ற கருத்து இத்தமிழ்நாட்டில் தொல்காப்பிய காலத்திற்கு முன்னிருந்தே நிலவிவருகின்றதென்பது வெளியாகின்றது.

ஞாயிறு, திங்கள் எனுஞ் சுடர்களிரண்டில் ஞாயிறு முதன்மை பெற்றிருக்கத் திங்களை முதலில் வைத்தார் இளங்கோவடிகள். 'ஞாயிறு போற்றுதும்' என்று பிறகே மொழிந்தார். நிலம்பிளக்க, மாம்வாட வெங்கதிர் வீசுகின்ற ஞாயிற்றின் இன்னாமையைக் கருத்திற்கொண்டு, இனிய தண்மையுடைய திங்களை முதற்கண் கூறினார், பிறப்பால் இளங்கோவாயினுஞ் சிறப்பாற் பெருங்கோவாகிய ஆசிரியர். மங்கலச் சொல்லை முதல்வைத்து நூல் தொடங்குவது மரபாதலின், திங்களுங் குடையுமிங்கே வந்தன. மிகுந்த வெப்பமுடைய காட்டில் ஞாயிற்றை மக்கள் சிறிது வெறுக்கின்றனர். திங்களைப் போற்றுதும், ஞாயிறு போற்றுதும், மாமழை போற்றுதும் என்று பாடிய முறையில், திங்களின் ஒளிக்கும், மழையுதவும் முகிலுக்குங் காரணமாயிருப்பது ஞாயிறு என்ற உண்மையை நாம் காணலாம். ஆசிரியர் அங்ஙனமெண்ணினர் என்று சொல்ல வியலாது. இது நிற்க.

ஒளியும் நிழலும் ஒன்றுக்கொன்று முரணுடையவை. பெரும்பான்மை ஒளி வெப்பத்துடன் கூடியே இருக்கும். இதுபோன்றே, நிழலுங் குளிர்ச்சியுஞ் சேர்ந்திருக்கும். திங்களின் ஒரு போற்றத்தகுந்த தன்மை என்னவெனின், அது வெளிச்சத்தையுங் குளிர்ச்சியையும் ஒருங்கே தன்பாற்கொண்டு திகழ்வது. மாறுபட்ட இரண்டைத் தன்னிற் புணர்த்தி உலகிற்கு ஈகின்ற மாட்சி திங்களுக்குரியது. இச்சிறப்பு மன்னனது குடைக்கு மிருத்தல்வேண்டுமன்றோ? இதனாலது கருங்குடை, நீலக்குடை, செங்குடையாகாது வெண்குடையாயிற்று.

(தொடரும்.)

மின்சார வேளாண்மை.

ஓர் அங்கிலக் கட்டுரையைத் தழுவிய மொழிபெயர்ப்பு.

திரு. N. B. இராமலிங்கம் B.A;
அழிஞ்சிக்குப்பம், மேல்பட்டி. வ. ஆ.

மின்சார சக்தியை முறைப்படி செலுத்துவதால் செடிகள் செழித்து வளரும். அவற்றிலுள்ள பூச்சிகளும் கொல்லப்பெறும். அவ்வற்புத சக்தியைப் பக்குவந் தவருமல் விதைக்கே நேராகச் செலுத்தின் முளை வேகமாகக் கிளம்பும்.

முறைகள்.

A. காற்றிலிருந்தும் நிலத்திலிருந்தும் மின்சார காந்த சக்தியைப் பெறும் விதம்:—

1. ஜாகேட்டிங் (Jaketing):-ஒன்று அல்லது இரண்டு அங்குலக் கண்களுள்ள இரும்புக் கம்பிகளினுலாகிய ஒரு சல்லடைக்கு ஜாகெட் என்று பெயர். நான்கு அல்லது ஆறு அங்குலம் குறுக்களவுள்ள அப்பேர்ப்பட்ட ஒரு தண்டைச் செடி அல்லது மரத்தின் அடிப்பாகத்தில் கொஞ்சம் மண்ணை எடுத்துவிட்டு அவ்வடிப்பாகத்திற்குக் கெட்டியாகச் சுற்றிவிடல் வேண்டும்.

எச்சரிக்கை:— அச்சச்சல்லடையின் ஒரு பாதி நிலத்திலும், மற்றொருபாதி நிலத்தின் மேலும் இருத்தல் நலம். இவ்வாறு செய்யும்போது மரத்தின் பட்டைக்கும் வேர்களுக்கும் ஒரு தீங்கும் செய்தல் கூடாது. சல்லடையை இணைத்தபிறகு மண்ணை முன்போலவே தள்ளிவிடல்வேண்டும். மேலும், சல்லடைக்கும் மரத்திற்குமுள்ள சம்பந்தம் அந்நியோன்னியமாய் இருத்தல் வேண்டும்.

மா, ஆரஞ்ச், முசுக்கட்டைச் செடி, கொய்யா, எலுமிச்சன், சீதாப்பழச் செடி, பலாமரம், முந்திரி, தக்காளி, திராக்ஷை, சூரிய காந்தி முதலிய எல்லா வகையான மரங்களுக்கும் செடிகளுக்கும் இம்முறையைக் கையாளலாம்.

2. காலர் (Collar):-இம்முறை மேற்கூறியதேயாகும். மரத்தின் கிளை நல்ல வளர்ச்சியற்றிருப்பின் அதற்கு இது கையாளப்பெறுகிறது. முன்கூறப்பெற்றதுபோன்ற ஒரு இரும்புச் சல்லடையை மரத்தில் வலிவற்ற கிளைபிரியும் இடத்தில் கெட்டியாகச் சுற்றிவிடல் வேண்டும். முன்சொன்ன நான்கு எச்சரிக்கைகளையும் இங்குக் கவனித்தல் வேண்டும்.

இந்த முறையும் நோய்பிடித்த எளிய வளர்ச்சியுள்ள செடிகளுக்குக் கையாளப்பெற்று நல்ல பயனை அளித்துள்ளது.

3. பார்டர் (Border):—இந்த முறைக்கும் முதல் சொன்ன (ஜாகெட்டிங்) முறைக்கும் அதிக வேறுபாடு ஒன்றும் இல்லை. ஒரே சாலையில் நெருக்கமாகவும், வரிசையாகவும் வளரும் செடிகளுக்கு இம்முறை பொருத்தமானது. ஏனெனில் மேற்கூறிய இரண்டு முறைகளையும் கையாளுவதற்கு நெருக்கமாகவுள்ள இந்தச் செடிகளின் அடிப்பாகம் வசதிப்படாது. உதாரணமாக நெருக்கமாகப் பயிராகும் தித்திப்புப் பட்டாணியை எடுத்துக்கொள்வோம். வரிசையாகவுள்ள செடிகளுக்குச் சல்லடையை முன்போலவே இணைக்கலாம்.

4. பெட் (Bed) விதை போடுவதற்குச் சாதாரணமாக ஒரு பாத்தி தயார்செய்து, அதே அளவுள்ள ஒரு சல்லடையை அதன் மேல் வைத்து, பிறகு இரண்டு அல்லது ஆறு அங்குல ஆழத்தில் இந்தச் சல்லடை இருக்கும்படியாக மேலே மண்ணைப் பரப்புதல் வேண்டும். ஆழம் விதைக்குத் தக்கவாறு இருத்தல் நலம். இப்பாத்தியை, விதை விதைப்பதற்கும் முளைத்த முளையை நடுவதற்கும் என இருவகையில் பயன்படுத்திக் கொள்ளலாம். விதைப்பது நாம் சாதாரணமாகச் செய்வதுமாதிரியேதான். கூஸ்பெரி, ஸ்ட்ராபெரி, முதலிய பல்வகைப் பழங்களின் விதைகளும் வெவ்வேறு விநோதமான பூக்களின் விதைகளும், அவரை, சுரை, பூசணி, சிவப்புக் கிழங்கு, கோஸ்முட்டை, தண்ணீர்மிட்டான், மிளகாய், தக்காளி முதலிய, காய் கறிகளும், சோளம், புகையிலை முதலிய பயிர்களும் இத்தகைய பாத்திகளில் சிறந்த பயனைத் தந்திருக்கின்றன.

5. அன்டென்னா (Antenna):—முதலில் உபரமான ஒரு கொம்பை நட்டு அதில் ஒரு நீண்ட கம்பியை இணைத்து, ஒரு முனையை மட்டும் சும்மா விட்டுவிட்டு மற்றொரு முனையைக் கொண்டுபோய் நோய்கொண்டுள்ள செடியின் தண்டுக்கு இரண்டு அல்லது மூன்று சுற்றுக்கள் கெட்டியாகச் சுற்றிவிடல் வேண்டும். அந்தச் செடி ஒரு சட்டியில் இருத்தல் வேண்டும். அச்சட்டியோ வேறெந்தப் பொருளுடனும் சம்பந்தப்பட்டிருத்தலாகாது. இதற்காகவேண்டி அதை உடைந்துபோன கண்ணாடி, அல்லது பீங்கான் துண்டுகளின்மேல் வைத்தல்வேண்டும். எப்படியெனில், கண்ணாடி அல்லது பீங்கானால் ஆகிய தட்டுக்கள், டம்ளர்கள், புட்டிகள் முதலியவைகள் உடைந்திருந்தால், அவைகளைச் சுத்தம்செய்து உலர்த்தி ஒரு பலகையின் மேல் பரப்பி அதன்மீது அச்செடியை வைத்தல்வேண்டும். இப்பொழுது இச்செடி நிலத்திற்கும் பலகைக்குந் தொடர்பில்லாமல் இருக்கிறது. இம்முறை முக்கியமாகச் செடிகளுக்கு நோய்வந்த காலத்தில் செய்யப்பெறுகிறது. இம்முறையைக் கையாளப்பெற்ற தக்காளி, ஸ்ட்ராபெரி முதலிய செடிகள் நல்ல பயனைத் தந்துள்ளன.

(தொடரும்.)

110

படிக்கும் பழக்கம்.

திரு. B. சாவளப்பா B. A;
தலைமை ஆசிரியர்,
இந்து ஆரம்பப் பாடசாலை, வாணியம்பாடி.

47-ம் பக்கத் தொடர்ச்சி.

வரைந்திருக்கும் பொருளின் சுவை யாதென அறிந்து அச் சுவைக்கேற்ற மெய்ப்பாடுகளுடன் வாய் நிரம்ப ஒலி விளங்கிக் கருத்துப் புலப்படவும் செவி மடுப்போருக்குப் பொருள்படவும் உணர்ச்சி பொங்கவும் படிப்பதே சீரிய படிப்பாகும்.

இனி, படிப்புக் கலையை மேற்கொள்வதன் பயன்களைக் கவனிப்போம். Reading enlarges the mind என Bacon என்ற அங்கிலப் புலவர் கூறுகிறார். பல நூல்களைப் படிக்கப்படிக்க அவைகளிலுள்ள பொருள்களை அறிவதால் அறிவு பெருகுகிறது. இதனாலன்றோ, 'கண்டது படிக்கின் பண்டிதனாவான்,' என்னும் பழமொழி வழங்குகிறது. மேலும், படிக்கும் பழக்கத்தை ஒருநாளும் தவறாது பழகும் ஒரு சீரிய ஒழுக்கமாகக் கொள்ளல் வேண்டும். அன்றாடம் படிக்காது விட்டால் பொருளின் தொடர்பு தெரியாது படிப்பதற்கு ஊக்கம் குன்றிப்போகும். பிறகு நாளாவட்டத்தில் படிக்கும் பழக்கும் நம்மைவிட்டு நீங்கியும் விடும். நாம் இளமையிலேயே திறமான பழக்கத்தைக் கடைப்பிடிப்போமாயின் அப்பழக்கம் நாம் உயிர்துறக்கும் வரையும் தொடர்ந்தே வரும். தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்ற முதுமொழி பழுதாகுமா? நாம் என்றும் படிக்கும் பழக்கத்தைக் கொள்ளல் வேண்டும் என்பதை வலியுறுத்தவே, 'பாடை ஏறினும் ஏடது கைவிடேல்' என்று முழங்கினர் நம் முன்னோர். மற்றும் நாம் படித்த பாடங்களைத் திருப்பப் படித்தாலல்லது படித்த பொருள்கள் நம் மனத்தில் வேரூன்றி என்றும் நிலை பெறா என்பதைக் கருதியே மேற்சொன்ன பழமொழியைப் பாடம் ஏறினும் ஏடது கைவிடேல் எனத் திருப்பியும் வழங்கினர். பாடம் போற்றாது விடின், பொருள் கூடிய சீக்கிரத்தில் நம் மனத்தினின்று மறையவே படித்திருந்தும் படிக்காத பாமரர்கள்போல் இருப்போம். நாம் படித்ததை ஒருமுறை எழுதினால் பன்முறை அதனையே படித்ததற்கு ஒப்பாகும் என்பர். இதனால்தான் Writing perfects a man என Bacon கூறுவர். எழுதுவதால் பொருள் மனத்தில் அணித்தரமாகப் பதியும்.

மொழித்திறங்கள் நான்காகும் அவை அங்கிலத்தில் Language bonds அல்லது Four-fold Abilities என்பன. 1. பேசுதல் 2. பிறர் பேசுவதை அறிதல் 3. எழுதல் 4. எழுதியதை வாசித்தல் என்னும் இந்நான்கு திறங்களில் வாசிக்குந் திறம் மிக்க பயனளிப்பதாகும். முதலில் பேசுந் திறத்தையும் பிறர் பேசுவதை அறியும் திறத்தையும் நோக்குவோம். கற்ற பண்டிதர்கள் ஒரே இடத்தில் கூடிக் குழுமியிராது தம் தம் நாட்டில் வசித்து வருகின்றனர். எல்லாப் பண்டிதர்களும் எல்லாக்கலைகளையும் அறிந்த அவதானிகளல்லர். ஒவ்வொருவரும் ஏதோ ஒரு கலையில்தான் வல்லவராக இருப்பார்கள். ஆகவே நாடுதோறும் சென்று ஒவ்வொரு பண்டிதரையும் கண்டு கலைகளைக் கற்று வருவது அரிது. அன்றியும் அன்னார் நூல்களை எழுதிக் கொள்வதும் மிக அரிது. மேலும் அவர்கள் பேசும் மொழிகளையும் வெவ்வேறு எல்லா மொழிகளையும் அறிதல் அரிதினும் அரிது. அச்சுயந்திரம் உள்ள இந்நாளில் எந்நாட்டுப் பண்டிதரும் தம் கருத்துக்களை எழுதி அச்சேற்றிப் புத்தகங்களாக்கி எங்கும் அனுப்புகிறார்கள். இப்புத்தகங்கள் எல்லாம் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. ஆகவே மிக எளிதில் அந்நூல்களை வாங்கியோ அல்லது நூற்களஞ்சியங்களுக்குச் சென்றோ வாசித்து எல்லாப் பண்டிதர்களுடைய கருத்துக்களையும் உணரலாம். இதுவரை கூறிவந்த காரணங்களால் வாசிக்கும் திறம் ஏனைய திறங்களினும் பயனுள்ளது என்பது வெளிப்படை. இதைக் கருதியே Reading has the greatest surrender value என்று அங்கில ஆசிரியர்கள் கூறினர்.

படிக்கும் பழக்கம் கைக்கொள்ள நேரம் இல்லையே எனச் சோம்பர் மனம் வருந்துமாறு கூறுகின்றனர். இது தவறான கூற்றாகும். முற்காலத்தில் ஊண், உடை, உறைவிடம் இவைகட்காக என்றும் உழைக்கவேண்டியதாயிருந்ததால் ஓய்வுநேரம் கிடைக்காதிருந்தது. ஆனால் தற்காலத்தில் யந்திரங்கள் ஏறக்குறைய நம் கைவேலைகள் எல்லாவற்றையும் செய்து வருவதால் வேலையில்லாக் காலம் அதிகரித்து வருகிறது. மிக அருமையான ஓய்வு நேரத்தைப் பல பயனற்ற காரியங்களில் வீணாக்குகின்றனர். உடல் உரம் பெற்ற வாலிபர்கள் சோம்பலுக்காளாகித் திண்ணைகள்மீது தூங்குவதும், சீட்டாடுவதும், வேடிக்கைப் பார்ப்பதும், பந்தயமாடுவதும், வீண்வாதமிடுவதும், கூத்துப் பார்ப்பதும் ஆகிய இன்னும் பல அற்பமானவையும் பிற்காலத்திற்குதவாதனவுமான பல சிறு செயல்களில் ஈடுபட்டுக் காலம் கழித்தும் தமக்கும் பிறர்க்கும் உழைக்காதும் கதி தேடிக்கொள்ளாதும் கடைசியில் தேம்பித் திரிகின்றனர்.

(தொடரும்.)

தேவகோட்டை

கொலைமறுத்தல் நிறைவேற்றம்.

நகரத்தாரின் ஆட்டுக்கடா பலி நிறுத்தப்பட்டது.

விக்ரமவருஷம் ஆடிமீ 2உ முதல் 7உ வரை கோட்டையம்மன் கோயில் பொங்கல் விழாவை முன்னிட்டுப் பலி நிறுத்தல் பிரசாரம் தீவிரமாக நடத்தப்பெற்றது. இதற்கென சென்னை ஜீவரக்ஷா பிரசார சபையின் சொற்பொழிவாளர் திரு. டி. எஸ். ஸ்ரீபால் அவர்கள் இந்நகருக்கு விஜயம்செய்திருந்தார்கள். அவர்களும் ஜீவகாருண்ய அன்பர்களான திரு. சரு. கி. சொர்ணநாதன் செட்டியார். மு. அ. சுப்பிரமணியம் செட்டியார். சுப்பையா தேசிகர். வித்வான் வயி நாக. ரம். அ. இராமநாதஞ் செட்டியார். பண்டித. கணபதி அய்யா புலவர். அப்துல் கபூர் சாகிப். இந்தி பண்டிட். சந்திரமௌலி, கரு. மாணிக்கஞ் செட்டியார் ஆகியவர்களும், ஸ்ரீ சொர்ணமூர்த்தி பெண் பாடசாலை மாணவிகளான திருமதி. க. நாச்சம்மை, லெ. சாரதாம்பாள், இரா. வள்ளியம்மை, சொ. வேதாம்பாள். சு. பெரியநாயகி, பழ. சிவகாமி, அ. லெக்ஷ்மி, வி. ராஜேஸ்வரி, இவர்களும் பிரசங்கம் செய்தார்கள். ஒவ்வொரு வீதிகளிலும் வால்போஸ்டுகள் ஒட்டப்பட்டன. வீடுகள்தோறும் மாணவிகள் துண்டு பிரசுரங்கள் கொண்டு போய்க் கொடுத்தனர். தினமும் ஜீவகாருண்ய பஜனை மாணவிகளால் நடத்தப்பட்டது.

ஸ்ரீ சொ. பெ. பாடசாலைத் தலைமையாசிரியர் முருகன் அவர்களும், சரஸ்வதி வாசகசாலை அங்கத்தினர்களும் ஏனைய ஆர்வமுள்ள இளைஞர் குழாமும், கலந்துகொண்டு பெரிதும் தொண்டாற்றினர்கள். இதன் பயனாக நீண்டகாலமாய் நகரத்தார்கள் சார்பில் ஆட்டுக்கடா வெட்டப்படும் பழக்கம் நிறுத்தப்பட்டது. அதனால், அநேக ஆடு, கோழிகள் உயிர் தப்பின, பலர் பலியிடுவதை நிறுத்தி அதற்குப் பதில் காணிக்கையாக உண்டியலில் போட்டார்கள். சரஸ்வதி வாசகசாலையில் ஓர் குரூப் போட்டோ எடுக்கப்பெற்றது இப்பணிக்கு இந்நகர் ஆ. வீ. க. குடும்பத்தார்கள் பொருளுதவி செய்ததை எல்லோரும் பாராட்டினார்கள்.

ஒரு நிருபர்.

113

ஸ்ரீமத் கோவிந்தானந்தகிரி சுவாமிகள் குருபூஜை விழா.

விக்ரமஸு ஆடிமீ 4உ (19—7—40) வெள்ளிக்கிழமை காலை 9-மணிக்குமேல் 11-மணிக்குள் ஆம்பூர் மேல் கிருஷ்ணபுரம் ஸ்ரீமத் கோவிந்தானந்தகிரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீமத் சாது சங்கரானந்தகிரி அவர்களால் ஸ்ரீமத் கோவிந்தானந்தகிரி சுவாமிகளின் குருபூஜை சிறப்புற நடத்தப்பெற்றது.

அன்றுமுதல் பிற்பகலில் 4-மணிக்குமேல் மூன்று நாட்களுக்கு குடியேற்றம் ஸ்ரீமத் வையாபுரி சுவாமிகள் மடாலயத் தலைவர் ஸ்ரீமத் கார்மேக சுவாமிகள் தலைமையில் புலவர் பெருமக்களால் அரிய சொற்பொழிவுகளும் தேவார பாராயணமும் நிகழ்த்தப்பெற்றன.

முதல்நாள் 19—7—40 வெள்ளிக்கிழமை தமிழணங்காசியர் திரு. ஆ. மா. சிவஞானம், ஹிந்து ஹைஸ்கூல் ஆசிரியர் திரு. R. பார்த்தசாரதி ஐயங்கார், ஆசிரியர் திரு. V. சந்திரநாத நைனர் ஆகியோர் முறையே "சுந்தரர்" "கண்ணன் கழறிய உண்மை" "திருவள்ளுவர் உவமைத் திறம்" என்பனபற்றியும், இரண்டாம் நாள் 20-7-40 சனிக்கிழமை காஞ்சீபுரம் பச்சையப்பன் உயர்கலைக் கழக ஆசிரியர்திரு. K. வஜ்ரவேல் முதலியார் B. A; L. T; செங்கம் போர்டு உயர்கலைக் கழகத் தலைமைத் தமிழாசிரியர் வித்வான் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை ஆகியோர் முறையே 'மொழிவளர்ச்சியும், மக்களுணர்ச்சியும்' 'பழந்தமிழ் மன்னர்' என்பனபற்றியும், மூன்றாம்நாள் 21-7-40 ஞாயிற்றுக்கிழமை அவைத்தலைவர் ஷை ஸ்ரீமத் கார்மேக சுவாமிகள் ஷை திரு. ஆ. மா. சிவஞானம் ஷை திரு. K. வஜ்ரவேல் முதலியார் முதலியோர் முறையே, 'காரைக்காலம்மையார்' 'தமிழ்நலம்' 'சம்பந்தரும் மெய்கண்டாரும்' என்பனபற்றியும் சொற்பொழிவாற்றினர்கள்.

இம்மூன்று நாட்களும் ஏழைமக்களுக்கு உணவளித்தலும் மகேஸ்வர பூஜையும் வெகு சிறப்பாக நடைபெற்றன.

ஒரு நிருபர்.

114

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருநாள் விழா.

சுண்ணன் திருச்சபை, ஆர்க்காடு.

இச்சபையின் 14-வது ஆண்டுவிழா, தேவாங்கர் வீதி, "சுந்தரர் நிலையத்தில்" ஆடி மாதம் 25, 26, 27, தேதிகளில் நடைபெற்றது. முதல்நாள், இச்சபையின் செயலாளர் திரு. T. S. G. வரதராஜுலு செட்டியார் அவர்களால் சுமார் 1500 ஏழைமக்களுக்குமேல் உணவு அளிக்கப்பட்டது. அன்று மாலை, திருவோத்தூர் தே. அண்ணாமலை முதலியார் தேவார பஜனையுடன் சுந்தரர் பட ஊர்வலம் சிறப்பாக நடைபெற்றது.

இரண்டாம் நாள், வல்லம் மகாவித்வான் உயர்திரு. வைத்திய லிங்கப் பிள்ளை அவர்கள் தலைமைதாங்க, ஆர்க்காடு உயர்கலாசாலைத் தமிழாசிரியர், வித்வான் சடகோபப் பிள்ளை, காட்டுக்காநல்லூர், சைவத்திரு, சுந்தர உடையார், முதலியோர் முறையே, "திருமங்கை ஆழ்வார்" "தூதுவிட்ட தொண்டர்" என்னும் பொருள்கள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

மூன்றாம்நாள், ஆர்க்காடு போர்டு உயர் கலாசாலைத் தலைமை ஆசிரியர் M. N. வடிவேல் முதலியார் அவர்கள் B. A; L. T; தலைமையின்கீழ், இவ்வூர் கலாசாலைத் தமிழாசிரியர் வித்வான் கோவிந்தராஜ முதலியார், திருவத்திபுரம் K. கோவிந்தன், செங்கம், உயர்கலாசாலைத் தமிழாசிரியர் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, ஆகியோர் முறையே "மெய்கண்டார்" "நன்னெறி" "அரசளித்த அர்மை" என்பனபற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

பின்னர், சபைத்தொண்டர், ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் வந்தனம் கூறலுடன் விழா இனிது நிறைவேறிற்று.

ஒரு நிருபர்.